**O.S. 55/2018 , 31.03.2022 11.35 am - 12.00 pm**

**வா.சா.2, கோவிந்தன், த/பெ.சீனிவாச நாயுடு, வயது 60**

சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-

எனக்கும், 1ம் பிரதிவாதி ராமுவிற்கும் என்ன உறவுமுறை என்றால் என்னுடைய பெரியப்பா மகன் ஆவார். அசல் வழக்கு எண்.58/2017 தாக்கல் செய்துள்ள வெங்கடாசலம், த/பெ.சீனிவாசன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என்னுடைய அண்ணன் ஆவார். 1ம் பிரதிவாதியான ராமமூர்த்தி, 2ம் பிரதிவாதி தியாகு என்பவர் மீது விடுதலைபத்திரம் எழுதி வைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தும், இதர சொத்துக்களும் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வாசு, அதன் பின்னிட்டு ராஜவேல், ராஜவேலுவிடமிருந்து பெருமாள் கிரையம் வாங்கினார். பூர்வீக சொத்து 1ம் பிரதிவாதியின் அப்பா சக்கரவர்த்திக்கு பாத்தியப்பட்டதாகும். வாசு கிரைய பெற்றதாக குறிப்பிட்டுள்ளீர்கள் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் போட்டிருக்கலாம் ஞாபகமில்லை. வெங்கடாசலத்திற்கு வழக்கு சொத்தில் எத்தனை அயிட்ட சொத்து பாத்தியப்பட்டது தெரியுமா என்றால் 2 அயிட்ட சொத்து ஆகும். சர்வே எண்.263/15ல் 16 செண்டும், 263/20ல் 3 செண்டும் மொத்தம் 19 செண்ட் ஆகும். சர்வே எண்.263/15-ற்கான செக்குபந்தி தெரியுமா என்றால் கிழக்கு பக்கம் சீனிவாசன், தெற்கு சாமி, வடக்கு சீனிவாசன், மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளது. அந்த செக்குபந்தியில் குறிப்பிட்டுள்ள சொததை குறித்து தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த செக்குபந்தி குறித்து மற்ற சொத்தை தாக்கல் செய்திருந்தால் நான் கொடுக்கும் சாட்சி சம்மந்தம் இல்லாதது என்றால் சரியல்ல, ஒன்றுடன் ஒன்று ஆகும். சர்வே எண்.263/20-ற்கு செக்குபந்தி விவரம் பொதுவழிக்கு தெற்கு, மற்ற அனைத்து திசைகளிலும் சீனிவாசனின் சொத்து ஆகும். மேற்படி செக்குபந்தி கொண்ட கிரைய ஆவணத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். நான் 10ஆம் வகுப்புவரை படித்துள்ளேன். வேறு ஏதேனும் சர்வே எண் கொண்ட சொத்தை கிரையமாக கொடுத்துள்ளார்களா என்றால் அது பற்றி தெரியாது. பி.சி.ராஜவேல் அவர்களுக்கு எவ்வளவு சொத்து கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரியாது என்றால் சரிதான். பி.சி.ராஜவேல் ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை போட்டு இருக்கலாம். 1996லேயே 2ம் பிரதிவாதி தியாகு பெயருக்கு உயில் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த உயிலின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு முழு சொத்தும் உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதனடிப்படையில் வருவாய்துறை ஆவணங்கள் அனைத்தும்' மாற்றப்பட்டு 2ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் தெரியாது. எனக்கு சர்வே எண் மற்றும் அதிலுள்ள விஸ்தீரணத்தை பற்றி தெரியாமல, சாட்சி கையொப்பத்தை பற்றி வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே எவ்வளவு நாட்களாக பிரச்சனை உள்ளது என்றால் பிரச்சனை இல்லை. 2017ல் வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து என்னுடைய தம்பிக்கும், பிரதிவாதிக்கு பிரச்சனை உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிகளின் வீட்டிற்கு பக்கத்தில் தான் என்னுடைய வீடு

உள்ளது என்று சொன்னால் சரிதான். 2015லிருந்து எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எந்த போக்குவரத்தும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இன்றைக்கு பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் பேசவில்லை, ஆனால், பண்டிகைகளுக்கு, விசேஷங்களுக்கு சென்று வருவோம். கடந்த 6 வருட காலத்தில் பிரதிவாதியின் எந்த விசேஷத்திற்கு சென்றுள்ளேன் என்றால் திருமணம், வீடு கிரகபிரவேசம், அவருடைய தாயாரின் காரியத்திற்கு சென்றுள்ளேன். வாசு என்கிற விஜயசங்கருக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே என்ன பரிமாற்றம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பரிவர்த்தனை முடிவுபெற்று அவருடைய அசல் ஆவணம் அனைத்தும் பிரதிவாதிகளிடம் உள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ஒரு பத்திரம் பதிவு செய்யவேண்டுமென்றால் அதனுடைய தாய்பத்திரம் இருந்தால் தான் பதிவு செய்ய முடியும் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். ராஜவேல் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் இன்றைய தேதிவரை யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த பத்திரம் இல்லாமல் பெருமாள் பதிவு செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பி.சி.ராஜவேல் அசல் பத்திரம் பெருமாளிடம் ஒப்படைக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது தெரியாமல் தான் அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சாட்சி கையொப்பம் செய்தேன், நிலத்தை நான் தான் பி.சி.ராஜவேலுவிடமிருந்து வாங்கி கொடுத்தேன். அவ்வாறு வாங்கி கொடுத்ததாக கூறும்பொழுது அதனுடைய அசல் பத்திரத்தை வாங்கி கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. பெருமாள் பெயரில் எப்பொழுது கிரையம் ஏற்பட்டது என்றால் 2003ஆம் வருடம், தேதி, மாதம் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்து எந்த இடத்தில் அவருடைய கையொப்பம் உள்ளது என்று எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டபொழுது அந்த ஆவணத்தில் பக்கம் 6ல் 3வதாக உள்ள கையொப்பம் என்னுடையது என்று ஆவணத்தை பார்த்து சாட்சியம் அளித்தார். அந்த ஆவணத்தில் அசல் ஆவணம் ஒப்படைக்கப்பட்டதாக ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. நான், பெருமாள் அனைவரும் சேர்ந்து போர்ஜரியாக உருவாக்கிய ஆவணம் என்றும், அதிலுள்ள சங்கதிகளின் அடிப்படையில் எந்த பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ராஜவேல் பெயரிலுள்ள அசல் ஆவணம் பிரதிவாதிகளிடம் உள்ளது, அது தெரியாமல் போர்ஜரியாக ஆவணம் உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க முன்னுக்குப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று, வழக்கில் உள்ள சங்கதிகள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை:-**</u> இல்லை.